# அரசாங்க சேவை ஆணைக்குழு

# வருடாந்த அறிக்கை

# 2019

இல. 1200/09, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.

தொலைபேசி - 011-2136600 / 011-2136650 / 011-2136700

தொலைநகல் - 011-2369302 / 011-2369305

மின்னஞ்சல் - secretary@psc.gov.lk /info@psc.gov.lk

இணையத்தளம் - www.psc.gov.lk

எனது இல. : PSC/ADM/07/02/2019
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 1200/09,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

2020 ஜூலை மாதம் 21 ஆம் திகதி

செயலாளர் நாயகம்,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்.

ஐயா,

**2019சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(5)ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2019சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய இத்துடன் தங்களுக்கு பணிவுடன் அனுப்பிவைக்கின்றேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள



**எம்.ஏ.பீ. தயா செனரத்**
**செயலாளர்,**
**அரசாங்க சேவை ஆணைக்குழு.**

## நோக்கு

தேசத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணிபுரியும் அரசாங்க சேவை

## செயற்பணி

நேர்மையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பாரபட்சமின்றியும் பொதுமக்களுக்கு பணியாற்றுவதற்கு வினைத்திறன்மிக்க ஒழுக்கமுள்ள மற்றும் திருப்தியுள்ள அரசாங்க சேவையொன்றை நிறுவுதல் மற்றும் ஊக்குவித்தல்

## 2019.01.01 - 2019.12.31 ஆம் திகதி வரை அரசாங்க சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள்

### தவிசாளர்

திரு. டி.திஸாநாயக்க

### உறுப்பினர்கள்

கலாநிதி திரு. பி. இராமனுஜம்

திருமதி .வீ. ஜெகராஜசிங்கம்

திரு. எஸ். ரனுக்கே

திரு .டி.எல். மென்டிஸ்

திரு. எஸ்.ஏ.சீ.எஸ்.டபிள்யு. ஜயதிலக்க

பேராசிரியர் திரு. ஏ.ஜீ.ஹுசைன் இஸ்மாயில்

திருமதி. சுதர்மா கருணாரத்ன

திரு. ஜீ.எஸ்.ஏ. டி. சில்வா

# பொருளடக்கம்


| தொடர்இல. | | விடயம் | பக்கம் |
|---|---|---|---|
| 1 | அறிமுகம் | | 01 |
| 2 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வரலாற்று ரீதியான பயணப் பாதை | | 01 |
| 3 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள் | | 03 |
| | 3.1 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் வினவக் கூடிய சந்தர்ப்பங்கள் | 05 |
| 4 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பான பொது மீளாய்வு | | 05 |
| | 4.1 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது முகம்கொடுக்க நேரிட்ட சவால்களும் பிரச்சினைகளுக்கும் வழங்கப்பட்ட தீர்வுகள் | 07 |
| 5 | அரசாங்க சேவைஆணைக்குழுவின் தத்துவங்களை கையளித்த பின்னர் பிரிவுகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள் | | 08 |
| | 5.1 | தாபனப் பிரிவு | 09 |
| | 5.1.1 | தாபனப் பிரிவின் செயற்பாடுகள் | 09 |
| | 5.1.2 | தாபனப் பிரிவின் முன்னேற்றம் (2019.01.01 - 2019.12.31) | 11 |
| | 5.2 | நியமனப் பிரிவு | 13 |
| | 5.2.1 | நியமனப் பிரிவின் செயற்பாடுகள் | 14 |
| | 5.2.2 | நியமனப் பிரிவின் முன்னேற்றம் (2019.01.01 - 2019.12.31) | 15 |
| | 5.3 | பதவி உயர்வுப் பிரிவு | 21 |
| | 5.3.1 | பதவி உயர்வுப் பிரிவின் செயற்பாடுகள் | 21 |
| | 5.3.2 | பதவி உயர்வுப் பிரிவின் முன்னேற்றம் (2019.01.01 - 2019.12.31) | 22 |
| | 5.4 | ஒழுக்காற்றுப் பிரிவு | 24 |
| | 5.4.1 | ஒழுக்காற்றுப் பிரிவின் செயற்பாடுகள் | 25 |
| | 5.4.2 | ஒழுக்காற்றுப் பிரிவின் முன்னேற்றம் (2019.01.01 - 2019.12.31) | 27 |
| | 5.5 | மேன்முறையீட்டுப் பிரிவு | 30 |
| | 5.5.1 | மேன்முறையீட்டுப் பிரிவின் செயற்பாடுகள் | 30 |
| | 5.5.2 | மேன்முறையீட்டுப் பிரிவின் முன்னேற்றம்(2019.01.01 - 2019.12.31) | 31 |
| | 5.6 | நிர்வாகப் பிரிவு | 32 |
| | 5.7 | நிதிப் பிரிவு | 32 |
| | 5.8 | உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 33 |
| 6 | கல்விச் சேவைக் குழு | | 33 |
| | 6.1 | கல்விச் சேவைக் குழுவின் செயற்பாடுகள் | 33 |
| | 6.2 | கல்விச் சேவைக் குழுவின் முன்னேற்றம் (2019.01.01 - 2019.12.31) | 34 |
| 7 | சுகாதார சேவைக்குழு | | 35 |
| | 7.1 | சுகாதார சேவைக் குழுவின் செயற்பாடுகள் | 36 |
| | 7.2 | சுகாதார சேவைக் குழுவின் முன்னேற்றம் (2019.01.01 - 2019.12.31) | 37 |
| 8 | நிதி ஒதுக்கீடு | | 38 |
| 9 | பணியாட் தொகுதி | | 38 |
| | 9.1 | நிறுவனக் கட்டமைப்பு | 38 |
| | 9.2 | பணியாட் தொகுதியின் அமைப்பு | 38 |
| | 9.3 | பணியாட் தொகுதிக்கான பயிற்சி நடவடிக்கைகள் | 39 |
| 10 | 2019 ஆம் ஆண்டில் ஒவ்வொருப் பிரிவினாலும் விளக்கங்கள் சமர்பிக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | | 39 |
| 11 | ஆணைக்குழு கூட்டங்கள் | | 39 |
| 12 | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடனான கூட்டங்கள் | | 39 |
| 13 | நன்றி நவிலல் | | 48 |
| | பின்னிணைப்புக்கள் | | 49 - 51 |

## 01. அறிமுகம்

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட 54(1) உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கு அமைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. அவர்களுள் ஆகக் குறைந்தது மூவர் பதினைந்து வருடங்களுக்கு மேல் அரசாங்க உத்தயோகத்தர்களாக கடமையாற்றி அனுபவம் பெற்றவர்களாக இருப்பர். இந்த அங்கத்தவர்களில் ஒருவர் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கு அமைய சனாதிபதி அவர்களினால் தவிசாளராக நியமிக்கப்படுவார். 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் அமுலுக்கு வந்த பின்பு 2015.10.15 ஆம் திகதி புதிய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அரசாங்க சேவை ஆணைக்குழு 2019 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் நறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பில் இந்த அறிக்கை அரசியலமைப்பின் 55(5) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கின்றது.

## 02. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வரலாற்று ரீதியான பயணப் பாதை

இலங்கை பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த போது 1946 மே மாதம் 15 ஆம் திகதி இலங்கை (அரசியலமைப்பு) அரச பேரவைக் கட்டளையின் மூலம் முதலாவது அரசாங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இதற்கமைய அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான நிறைவேற்று அதிகாரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டன.

1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் அதுவரை இருபத்தாறு வருட காலமாக இயங்கி வந்த அரசாங்க சேவை ஆணைக்குழு இல்லாதொழிக்கப்பட்டு, அரசாங்க சேவை தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவையிடம் கையளிக்கப்பட்டன.

1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழு மீண்டும் நிறுவப்பட்டது. அந்த ஆணைக்குழு மேன்முறையீட்டு அதிகாரியாக மாத்திரம் செயற்பட்டது. 1992 ஆம் ஆண்டில் அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களின் (சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு மேலுள்ள பதவிகள் தவிர்ந்த) நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவையினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டதற்கிணங்க அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அவை நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆணைக்குழுவினால் அல்லது அதன் மூலம் தத்துவங்கள் கையளிக்கப்பட்ட குழுவொன்றினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை மாற்றுவதற்கு, பகுதியளவில் திருத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு வழிவகுக்கும் தத்துவங்கள் அமைச்சரவையினால் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ளப்பட்டன.

2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக அரசாங்க சேவை தொடர்பாக அதுவரையும் இருந்து வந்த IX அத்தியாயம் நீக்கப்பட்டு புதிய அத்தியாயமொன்று சேர்க்கப்பட்டது. அதற்கிணங்க,

அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கமைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற 09 அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. அவர்களுள் ஆகக் குறைந்தது மூவர் பதினைந்து வருடங்களுக்கு மேல் அரசாங்க உத்தயோகத்தர்களாக கடமையாற்றி அனுபவம் பெற்றவர்களாக இருப்பர். அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் பேரில் சனாதிபதி அவர்களினால் அந்த அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார். இத்திருத்தத்தினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிலை பாரிய மாற்றத்திற்கு உட்பட்டது. அதற்கமைய அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்குரிய நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை என்பன தொடர்பில் அமைச்சரவைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த தத்துவங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டன. மேலும் இங்கு அரசாங்க சேவை ஆணைக்குழு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக பாராளுமன்றத்திற்கு வகை சொல்வதற்கும் பதில் கூறுவதற்கும் கட்டுப்பட்ட நிறுவனமாக மாற்றப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாபிதம் மற்றும் அதன் பணிகளுடனும் தொடர்புடைய விடயங்கள் திருத்தப்பட்டன. இந்த ஆணைக்குழு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு பதில் அளிக்க வேண்டிய ஆணைக்குழுவாகும். 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தப்பட்ட 54(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. அவர்களுள் ஆகக் குறைந்தது மூவர் பதினைந்து வருடங்களுக்கு மேல் அரசாங்க உத்தியோகத்தர்களாக கடமையாற்றி அனுபவம் பெற்றவர்களாக இருப்பர். சனாதிபதி அவர்களினால் அந்த அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார். இவர்கள் மூன்று வருட காலப்பகுதிக்கு தமது பதவியை வகிப்பதுடன் தொடர்ந்தும் அவ்வாறனதொரு காலப்பகுதிக்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறுகின்றனர்.

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தப்பட்டவாறான 55(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பான சகல கொள்கை ரீதியான விடயங்களுக்கும் அமைச்சரவையினால் ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான தத்துவங்கள் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளன.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட 54(1) உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கு அமைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. அவர்களுள் ஆகக் குறைந்தது மூவர் பதினைந்து வருடங்களுக்கு மேல் அரசாங்க உத்தயோகத்தர்களாக கடமையாற்றி அனுபவம் பெற்றவர்களாக இருப்பர். சனாதிபதி அவர்களினால் அந்த அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார். அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அரசாங்க

உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான தத்துவங்கள் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் கணக்காய்வு ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் தொடர்பாக செயலாற்றுவதற்கான தத்துவங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் 57(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கல்விச் சேவைக்குழுவும் சுகாதார சேவைக்குழுவும் தாபிக்கப்பட்டுள்ளன.

## 03. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள்

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், தரைப்படை, கடற்படை, விமானப் படை அங்கத்தவர்கள் அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகத்ரொருவர் அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரொருவர் அல்லது நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தரொருவர் அல்லது கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு சேவை உத்தியோகத்தரொருவர் அல்லது மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களினால் நியமிக்கப்பட்ட மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள், சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படும் அமைச்சுச் செயலாளர்கள், அமைச்சரவையினால் நியமிக்கப்படும் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசாங்கக் கம்பனிகள் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் தவிர்ந்த மாகாண சபைகளில் பணியாற்றும் நாடு முழுவதற்குமான சேவைக்குரிய உத்தியோகத்தர்கள் மற்றும் பிற அனைத்து அரச உத்தியோகத்தர்களினதும்,

- நியமனம்
- பதவியுயர்வு
- இடமாற்றம்
- ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவி நீக்கம் செய்தல் என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இல 1955/22 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் செய்யப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளித்தலுக்கு அமைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 6/2006 இல் பொருள்கோடப்பட்டுள்ள (அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் நீதித்துறை அலுவலர்கள் தவிர்ந்த) மூன்றாம் நிலை அதியுயர் தர மற்றும் விசேட தர உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய சகல உத்தியோகத்தர்களும் ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலை சகல உத்தியோகத்தர்களினதும் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான அதிகாரங்கள் அமைச்சுச் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கும் கையளிக்கப்பட்டுள்ளன. அரசாங்க சேவையின் சகல உத்தியோகத்தர்களினதும் தாபன விதிக்கோவையின்

XLVIII அத்தியாயத்தின் இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் திணைக்களத் தலைவர்களுக்கு அல்லது அமைச்சு செயலாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இல 1992/07 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இல 1989/29 மற்றும் 2016.10.19 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள கல்வித்துறை சார்ந்த உத்தியோகத்தர்களின் நியமனம், சேவை நிரந்தரமாக்கல், பதவி உயர்வு, இடமாற்றம், சேவையை முடிவுறுத்தல், பதவி விலகல், ஓய்வுபெறுகை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் அமர்த்தல் போன்ற பணிகளும் அத்தோடு சேவை வெறிதாக்கல் கட்டளைகளுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக பரிசீலனை செய்தல், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பாக ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல் தொடர்பான அதிகாரங்கள் கல்விச் சேவைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தியுறும் அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு அரசியலமைப்பின் 58(1) உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு எழுத்துமூல மேன்முறையீடு ஒன்றை செய்ய முடியும்.

இல 1994/24 மற்றும் 2016.10.27 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள சுகாதாரத்துறை சார்ந்த உத்தியோகத்தர்களின் நியமனம், சேவை நிரந்தமாக்கல், பதவி உயர்வு, இடமாற்றம், சேவையை முடிவுறுத்தல், பதவி விலகல், ஓய்வுபெறுகை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் அமர்த்தல் போன்ற பணிகளும் அத்தோடு சேவை வெறிதாக்கல் கட்டளைகளுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக பரிசீலனை செய்தல், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பாக ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல் தொடர்பான அதிகாரங்கள் சுகாதார சேவைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தியுறும் அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு அரசியலமைப்பின் 58(1) உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு எழுத்துமூல மேன்முறையீடு ஒன்றை செய்ய முடியும். மேலும் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் அனைத்து கல்வித்துறை ஆளணியைச் சேர்ந்த அதாவது ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளின் இடமாற்றம் மற்றும் அவர்களது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் தொடர்பில் தேசிய சேவைக்குரிய ஆயினும் மாகாண அரசாங்க சேவைக்கு இருநிலை அடிப்படையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை உண்டு. அவ்வாறே, பதவி நீக்கத்திற்கு எதிராக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை மாகாண கல்விச் சேவைக்குரிய அதிகாரிகளுக்கும் உண்டு.

ஆயினும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஏதேனும் அதிகாரக் கையளிப்புக்கு ஏற்புடைய விடயப் பரப்பு தொடர்பாகவோ அல்லது அந்த ஆணைக்குழுவினால் அவ்வாறு செய்யப்பட்ட ஏதேனும் அதிகாரக் கையளிப்பை

நடைமுறைப்படுத்தல் தொடர்பாகவோ ஏற்படக்கூடிய எதிர்பாரா நிலமையொன்றின் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதும் அறுதியானதுமாக இருத்தல் வேண்டும்.

### 3.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் வினவக் கூடிய சந்தர்ப்பங்கள்

கீழ் காணும் சந்தர்ப்பங்கள் தவிர ஆணைக்குழுவின் தீர்மானங்களை எந்தவொரு நீதிமன்றத்திலும் அல்லது நியாய சபையிலும் கேள்விக்குட்படுத்த முடியாது.

- அரசியலமைப்பின் 61 அ உறுப்புரையின் பிரகாரம் 126 ஆவது உறுப்புரையின் (1), (2), (3), (4), (5) ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அடிப்படை உரிமை சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருதல்.

- அரசிலமைப்பின் 59(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்தல்.

## 04. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பான பொதுவான மீளாய்வு

அரசாங்க சேவையின் நிறைவேற்றுத் தர சேவைகளுக்கு நியமனம் வழங்கும் போது ஒவ்வொரு சேவைக்குமுரிய விசேட கல்வி அறிவு, திறமை மற்றும் சேவை அனுபவம் என்பன கவனத்திற்கொள்ளப்பட்டு ஆட்சேர்ப்புத்திட்டங்களுக்கு அமைவாக வெளிப்படைத்தன்மையுடன் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும் உரிய தருணத்தில் ஆட்சேர்ப்புக்களை செய்வதனூடாக அரசாங்க சேவை தற்போது வேண்டி நிற்கின்ற கல்வி அறிவு, திறமை மற்றும் சிறந்த உளப்பாங்குகள் கொண்ட இளைய சமுதாயத்தை அரசாங்க சேவையின் நிறைவேற்றுத் தரத்திலான சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடிந்துள்ளது.

ISO 9001:2008 சர்வதேச தர நியமங்களின் அடிப்படையில் முகாமைத்துவ கட்டமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளது. அதன் நிமித்தம் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்த தர முகாமைத்துவ கட்டமைப்பில் தொடர்ந்தேர்ச்சியான முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனூடாக ஏற்புடைய செயன்முறைக்கு கால நிர்ணயம் மற்றும் வேலைப் படிமுறை வழங்கப்பட்டிருப்பதனால் நியாயமான ஒரு காலப்பிரிவுக்குள் மிகவும் முறையாகவும் சரியாகவும் பணிகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சேவைப் பெறுநர் பட்டயமொன்று தயாரிக்கப்பட்டு செயற்பாடுகளுக்கான இலக்கிடப்பட்ட காலப்பிரிவு வழங்கப்பட்டுள்ளதனால் வினைத்திறன் மேலும் அதிகரித்துள்ளது.

கடந்த வருடங்களைப் போன்று இந்த வருடத்திலும் அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான மேலதிக செயலாளர்களை அழைத்து கடந்த வருடம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுடன் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பாக மீளாய்வு செய்து செயற்பாடுகளை துரிதப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பிட்ட ஒரு காலப்பிரிவுக்குள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு இலக்குகள் வழங்கப்பட்ட காரணத்தினால் சிறந்த வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க முடிந்தது. நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்கு ஏற்புடைய அனைத்து ஆவணங்களையும் பூரணப்படுத்தி ஒரே தடவையில் சமர்ப்பிக்காத காரணத்தினால் ஏற்படும் தாமதங்களை தவிர்ப்பதற்காக சுற்றறிக்கை ஒன்றினை வெளியிடுவதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் உள்ள மாதிரிப் படிவங்கள், சரிபார்ப்பு பட்டியல்கள் தொடர்பில் மீண்டும் அறிவூட்டுவதன் மூலம் நியமனங்கள் மற்றும் பதவி உயர்வு நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனாக்குவதற்கு இயலுமாகியுள்ளது.

மேலதிக செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர் மற்றும் பிரதம கணக்காளர் போன்ற மற்றும் அதற்குச் சமமான வேறு பதவிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்படும் நியமனங்கள் அல்லது அந்தப் பதவிகளிலிருந்து உத்தியோகத்தர்களை நீக்கும் போது அதற்கான தழுவல் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் சிக்கல்கள் மற்றும் தீங்கான நிலமைகளை தவிர்ப்பதற்காக அவ்வாறான நியமனங்களுக்கு முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியதன் மூலம் ஏற்புடைய நியமனங்களை முறைமைப்படுத்த இயலுமாகியது.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 06/2006 பிரகாரம் திருத்தியமைக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் உரிய முறையில் நடைப்பெறாத காரணத்தினால் பாதிப்படையும் உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குதல், பதில் கடமை, கடமைகளை நிறைவேற்றல் மற்றும் ஓய்வுபெறுவித்தல் ஆகியவற்றுக்கான நடவடிக்கை முறைகளை முறைமைப்படுத்தி அதற்கு அனுமதி வழங்க முடியுமான அதிகாரங்களை பன்முகப்படுத்துவதன் ஊடாக தாமதமின்றி ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்து சேவையை எதிர்பார்த்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு துரிதமான சேவையை வழங்கும் பொருட்டு முறையான நினைவூட்டல்களை வழங்கி மற்றும் கடிதத் தொடர்புகளை குறைத்து கலந்துரையாடல்களை நடாத்தி செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்க சேவையின் நிறைவேற்றுத் தர சேவைகளுக்கு பதவி உயர்வு வழங்கும் போது ஒவ்வொரு சேவைக்குமுரிய விசேட கல்வி அறிவு, திறமை மற்றும் சேவை அனுபவம் என்பன கவனத்திற்கொள்ளப்பட்டு ஏற்புடைய பதவி உயர்வுத் திட்டங்களுக்கு அமைவாக வெளிப்படைத்தன்மையுடன் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தாமதமின்றி பதவி உயர்வுகள் வழங்குவதனூடாக அரசாங்க உத்தியோகத்தர்களிடத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தி தரமான மற்றும் பயனுள்ள அரசாங்க சேவையைப் பேணிவர முடிந்துள்ளது.

அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரினால் வழங்கப்படுகின்ற கட்டளை தொடர்பில் அதிருப்திக்குள்ளான அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு அரசியலமைப்பின் 58(1) உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் மேன்முறையீடு தொடர்பாக

காணப்படும் சட்ட ரீதியான ஏற்பாடுகளின் கீழ் நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற தீர்மானத்தை வழங்குவதன் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நியாயமான மேன்முறையீட்டை சமர்ப்பிப்பதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அமுலிலுள்ள சட்ட வரையறைக்குள் நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆளணி உத்தியோகத்தர்கள் அனைவரதும் நலன்புரிக்காக வருடாந்த சுற்றுலா மற்றும் உத்தியோகத்தர்களின் கலைத் திறமைகளை மெருகூட்டும் நோக்கில் நடாத்தப்பட்ட "இசைக் கச்சேரி" போன்ற நிகழ்வுகள் இந்த வருடத்திலும் வெற்றிகரமாக நடைபெற்றது.

## 4.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிகளை மேற்கொள்ளும் போது முகம்கொடுக்க நேரிடுகின்ற சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் வழங்கப்பட்ட தீர்வுகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் தயாரித்தல், நியமனம், பதவி உயர்வு, ஒழுக்காற்று மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கும் போது பல்வேறுபட்ட உத்தியோகபூர்வ பிரச்சினைகள் எழுகின்ற காரணத்தினால் ஏற்படும் தாமதங்களை தவிர்க்கும் பொருட்டு ஏற்புடைய நிறுவனங்களது உத்தியோகத்தர்களுடன் தேவையான சந்தர்ப்பங்களில் கூட்டங்களை நடாத்தி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் துரிதமாக பதிலைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு நினைவூட்டல்களை அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 06/2006 பிரகாரம் திருத்தியமைக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் உரிய முறையில் நடைபெறாத காரணத்தினால் பாதிப்படையும் உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குதல், பதில் கடமை, கடமைகளை நிறைவேற்றல் மற்றும் ஓய்வுபெறுவித்தல் ஆகியவற்றுக்கான நடவடிக்கை முறைகளை முறைமைப்படுத்தி அதற்கு அனுமதி வழங்க முடியுமான அதிகாரங்களை பன்முகப்படுத்துவதன் ஊடாக தாமதமின்றி ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் மற்றும் கட்டளைகள் அன்றைய தினமே இணையத்தளத்தில் பிரசுரிப்பதன் மூலம் சேவைப் பெறுநர்களுக்கு உடனடியாக அந்தத் தீர்மானங்களை அல்லது கட்டளைகளை தொடர்பாடல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் காணப்பட்ட பணிக் கடமைளை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிப்பதில் காணப்பட்ட முரண்பாடுகளை குறைத்து கடமைகளை மீண்டும் கையளிக்கப்பட்ட காரணத்தினால் வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் அதிகரித்துக்கொள்ள முடியுமாகியது. சில பிரிவுகளில் சேவையாற்றிய பெண் உத்தியோகத்தர்கள் பிரசவ லீவு பெற்றுக்கொண்ட காரணத்தினால் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவில் நீண்டகாலம் சேவையாற்றி அனுபவம் பெற்றிருந்த பல உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்ற காரணத்தினால் புதிதாக நியமனம் பெற்று வந்த உத்தியோகத்தர்களுக்கு

அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சில காலங்கள் தேவைப்படுவதனால் அவர்களுக்கு பயிற்சியளித்து பின்னூட்டம் செய்வதனூடாக தேவையான சேவையை வினைத்திறனுள்ள வகையில் பெற்றுக்கொள்ள முடிந்தது.

சில சேவைகளுக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் காணப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அந்தந்த சேவைகளில் காணப்பட்ட வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் ஆட்சேர்ப்புத் திட்டங்களை திருத்தும் போது அவற்றின் நுன் பிரதிகள் வரழைக்கப்பட்டு தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்ற பின்னர் அந்த திருத்தப்பட்ட நுன் பிரதிகள் மின்னஞ்சல் மூலமாக ஏற்புடைய அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாக அனாவசிய தாமதங்களை தவிர்த்து மிகவும் வினைத்திறனுள்ள சேவையை வழங்க முடிந்தது.

மேலும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழுவுக்கு இது வரையில் பொறுப்பளிக்கப்பட்டிருந்த கடமைகளுக்கு மேலதிகமாக திணைக்களப் பதவிகளுக்குரிய உள்ளீர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் தாதியர், துணை நிலை மருத்துவ சேவைகளில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் அமர்த்தல் தொடர்பான நடவடிக்கைகளும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட ஆளணி காணப்பட்ட போதிலும் தாமதம் இன்றி பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானமொன்றினால் அதிருப்திக்குள்ளாகும் ஆட்களினால் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையினால் வழங்கப்படும் நடைமுறைப்படுத்த முடியாத தீர்மானங்கள் மற்றும் அமுலிலுள்ள சட்ட திட்டங்களுக்கு ஏற்புடையதாகாத தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் போது முழு அரசாங்க சேவையிலும் பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்பதனால் இந்த பிரச்சினைக்குரிய நிலமை அரசாங்க சேவை ஆணைக்குழு முகம் கொடுக்கும் ஒரு தடைக்கல்லாக கருத முடியும்.

எவ்வாறெனினும், 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் கருத்திற்கொள்ளும் போது சவால்களை சந்தர்ப்பங்களாகக் கருதி மற்றும் பிரச்சினைகளை விரிவாக பகுப்பாய்வு செய்து அவற்றுக்கு தீர்வுகளை கண்டு பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் அன்னியோன்னிய ஒத்துழைப்புடன் அரசாங்க சேவையை வெற்றிப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கு இயலுமாகிய ஒரு வருடமாகக் கருத முடியும்.

## 05. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள் கையளிக்கப்பட்ட பின்னர் பிரிவுகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அரசியலமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களை நிறைவேற்றுவதற்கு பின்வரும் பிரிவுகளினால் தேவையான பங்களிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

- ❖ தாபனப் பிரிவு
- ❖ நியமனப் பிரிவு

- ❖ பதவியுயர்வுப் பிரிவு
- ❖ ஒழுக்காற்றுப் பிரிவு
- ❖ மேன்முறையீட்டுப் பிரிவு
- ❖ நிருவாகப் பிரிவு
- ❖ கணக்குப் பிரிவு
- ❖ உள்ளக கணக்காய்வுப் பிரிவு

## 5.1 தாபனப் பிரிவு

இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்புக்கு இணங்க, அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல சேவைகளுக்கும் சேவைப் பிரமாணக் குறிப்பொன்றையும் அந்த சேவைக்கு வெளியே அனுமதிக்கப்படும் சகல பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புத் திட்டமொன்றையும் தயாரிக்கும் பணி தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அந்த சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் என்பவற்றை தயாரிக்கின்ற போது அனுமதிக்கப்பட்டுள்ள சகல பதவிகளுக்கும் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது பின்பற்றப்பட வேண்டிய ஆட்சேர்ப்பு முறை, ஆட்சேர்ப்புக்கான தகைமைகள், பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம், சேவை நிபந்தனைகள், பதவி உயர்வு முறைகள் மற்றும் ஏற்புடைய ஏனைய சகல விடயங்களும் உள்ளடக்கப்படும். ஏற்புடைய சேவைப் பிரமாணக் குறிப்பை அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தை அனுமதிப்பதற்கு முன்னர் பதவிகள் அனுமதித்தல் தொடர்பாக முகாமைத்துவ சேவை பணிப்பாளரின் அனுமதியும் சம்பள அளவுத்திட்டம் தொடர்பாக சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபாரிசும் சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தின் வரைவுக்கு தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

### 5.1.1 தாபனப் பிரிவின் செயற்பாடுகள்

- அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல சேவைகளுக்கும் சேவைப் பிரமாணக் குறிப்பொன்றை தயாரித்தல்.
- அந்த சேவைக்கு வெளியே அனுமதிக்கப்படும் சகல பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை தயாரித்தல்.
- பதவி உயர்வுத் திட்டங்களை தயாரித்தல்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குரிய அதிகாரங்கள், கையளிப்பது தொடர்பான செயற்பாடுகள்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளை அடிப்படையாகக் கொண்டு அறிவுறுத்தல் கோவைகளை தயாரித்தல்.
- சகல சேவைகளுக்கும் இடமாற்ற நடைமுறைகளை தயாரித்தல்.
- அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பை, ஆட்சேர்ப்புத் திட்டத்தை அல்லது இடமாற்ற நடைமுறையை திருத்த உத்தேசிக்கும் போது ஏற்புடைய செயலாளரின் சிபாரிசுக்கு அமைய அந்த சேவை பிரமாணக் குறிப்பை அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தை திருத்த நடவடிக்கைகளை எடுத்தல்.

- தத்துவங்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் செய்யப்படும் நியமிப்புக்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாக கொள்கை தீர்மானங்களை வழங்குதல்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், சேவைப் பிரமாணக் குறிப்புகள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், இடமாற்ற நடைமுறைகள் சுற்றறிக்கைகள், கட்டளைகள் என்பனவற்றிற்கு அப்பாற்பட்டு செயற்படும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் எழுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதல்.
- 2016 இல 12 எனும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடைய நடவடிக்கைகள்.

### 5.1.2 தாபனப் பிரிவின் முன்னேற்றம் - (2019.01.01 - 2019.12.31)

| இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆட்சேர்ப்புத் திட்டங்கள் | 52 |
| | சேவைப் பிரமாணக் குறிப்புகள் | 02 |
| 2 | இடமாற்ற நடைமுறைகள் | 06 |
| 3 | பதவி உயர்வுத் திட்டங்கள் | 19 |
| 4 | ஆட்சேர்ப்புத் திட்டங்கள் திருத்தம் | 80 |
| 5 | சேவைப் பிரமாணக் குறிப்புகள் திருத்தம் | 28 |
| 6 | இடமாற்ற நடைமுறைகள் திருத்தம் | 09 |
| | பதவி உயர்வுத் திட்டங்கள் திருத்தங்கள் | 05 |
| 7 | கொள்கைகள் தொடர்பான விடயங்கள் | 139 |
| 8 | பொதுவான விடயங்கள் | 125 |
| 9 | விசேட சந்தர்ப்பங்களின் போது சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு செய்யப்படுகின்ற கோரிக்கைகள் | 02 |
| 10 | விசேட சந்தர்ப்பங்களின் போது ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு செய்யப்படுகின்ற கோரிக்கைகள் | 25 |
| 13 | நிர்வாக அதிகாரங்களை கையளித்தல் | 17 |
| 14 | உயர்நீதிமன்றம், நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை, மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் | 15 |
| 15 | சுற்றறிக்கைகள் | 04 |
| | **மொத்தம்** | **528** |

*அட்டவணை இல. 01*

## தாபனப் பிரிவின் முன்னேற்றம் - (2019.01.01 - 2019.12.31)




*படம் 01*

### 2019.01.01- 2019.12.31 திகதி வரை அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் பற்றிய விபரங்கள்

| தொ. இல | அமைச்சு | அங்கீகரிக்கப்பட்ட ஆ.சே.தி |
|---|---|---|
| 1 | கல்வி அமைச்சு | 03 |
| 2 | நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 06 |
| 3 | உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | 13 |
| 4 | பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல்கள் அமைச்சு | 01 |
| 5 | மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி | 02 |
| 6 | மகளிர், சிறுவர் மற்றும் வரல் வலய அபிவிருத்தி அமைச்சு | 01 |

| | | |
|---|---|---|
| 7 | தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சு | 01 |
| 8 | வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 02 |
| 9 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 02 |
| 10 | ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | 05 |
| 11 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 01 |
| 12 | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 02 |
| 13 | அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 02 |
| 14 | அரசாங்க தொழில் முயற்சிகள், கண்டி மரபுரிமைகள் மற்றும் கண்டி நகர் அபிவிருத்தி | 01 |
| 15 | விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 01 |
| 16 | தொலைதொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | 01 |
| 17 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 01 |
| 18 | சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிருஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு | 01 |
| 19 | சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு | 01 |
| 20 | சுகாதாரம் போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 02 |
| 21 | தேசிய பெறுகை ஆணைக்குழு | 01 |
| 22 | பாராளுமன்றத்தின் ஆளும்கட்சியின் பிரதான அமைப்பாளர் | 01 |
| 23 | நிதி ஆணைக்குழு | 01 |
| | **மொத்தம்** | **52** |

அட்டவணை இல 02

2019.01.01- 2019.12.31 திகதி வரை அங்கீகாரம் வழங்கப்பட்ட பதவி உயர்வுத் திட்டங்கள் பற்றிய விபரங்கள்

| தொ. இல | அமைச்சு | அங்கீகரிக்கப்பட்ட ஆ.சே.தி |
|---|---|---|
| 1 | கல்வி அமைச்சு | 02 |
| 2 | ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | 09 |
| 3 | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 01 |
| 4 | சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 03 |
| 5 | தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சு | 01 |
| 6 | கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்பாசனம் மற்றும் கடற்றொழில் மற்றும் நீரகவளமூல அபிவிருத்தி அமைச்சு | 02 |
| 7 | காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு | 01 |
| | **மொத்தம்** | 19 |

அட்டவணை இல 03

## 2019 ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட இடமாற்ற நடைமுறைகள் (11)

1. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் இடமாற்ற நடைமுறை
2. வனப் பாதுகாப்புத் திணைக்களத்தில் சேவையாற்றும் திணைக்கள அலுவலர்கள் மற்றும் சமாந்திர சேவைகளின் இடமாற்ற நடைமுறை
3. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கான இடமாற்ற நடைமுறை
4. இலங்கை நிர்வாக சேவையின் I, II, III தரங்களுக்கான இடமாற்ற நடைமுறை
5. உள்நாட்டலுவல்கள் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டு மாவட்ட / பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை
6. உள்நாட்டலுவல்கள் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டு மாவட்ட / பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை

### 2019.01.01- 2019.12.31 திகதி வரை அங்கீகாரம் வழங்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புகள் பற்றிய விபரங்கள்

1. ஆசிரிய ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்பு
2. இலங்கை விலைமதிப்பீட்டாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

## 2019 ஆம் ஆண்டுக்குரிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்கள் (04)

| | | | |
|---|---|---|---|
| 1. | 01/2019 | - | சேவைமூப்புக்கு புள்ளிகள் வழங்கப்படும் தகைமையைப் மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை |
| 2. | 02/2019 | - | சட்ட அலுவலர்கள் பதவிக்காக அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களில் தகைமைகளை திருத்துதல் |
| 3. | 01/2019(1) | - | சேவைமூப்புக்கு புள்ளிகள் வழங்கப்படும் தகைமையைப் மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை |
| 4. | 04/2019 | - | அரசாங்க சேவையிலிருந்து வெ ளியிலுள்ள பதவியொன்றுக்கு விடுவிக்கப்படும் சேவைக் காலம் தொடர்பில் |

## 5.2 நியமனப் பிரிவு

இல 1955/22 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அதி விசேடமான வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மற்றும் 1989/29 மற்றும் 2016.01.29, 1990/24 மற்றும் 2016.10.27, 1992/7 மற்றும் 2016.11.07 எனும் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவினது தத்துவங்கள் கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களின் (அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரச சேவை உத்தியோகத்தர்கள், நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் நீங்கலாக) நியமனங்கள் தொடர்பிலான பின்வரும் பணிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

### 5.2.1 நியமனப் பிரிவின் செயற்பாடுகள்

அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புகள் / ஆட்சேர்ப்புத் திட்டங்கள்/ பதவி உயர்வுத் திட்டங்களின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையில் நிரந்தரமாக்கல், சேவையை முடிவுறுத்தல், முதலில் வகித்த பதவிக்கு மீள நியமித்தல், பதில் கடமை /கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் நியமித்தல், சேவையிலிருந்து விடுவித்தல் (நிரந்தர / தற்காலிக அடிப்படையில்), ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தல், சேவைக்கு / பதவிக்கு மீள நியமித்தல், ஓய்வுபெறச் செய்தல் (ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2:17 ஆம் பிரிவின் கீழ் ஓய்வுபெறுகை தவிர்ந்த), ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் அமர்த்தல், சேவைப் பிரமாணக் குறிப்புகளில் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு (ஏற்புடைய சந்தர்ப்பங்களில்) நியமித்தல்.

மேற்கூறப்பட்ட பணிகள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு / தீர்மானங்களுக்கு எதிராக நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பிலும் உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 5.2.2 நியமனப் பிரிவின் முன்னேற்றம் - (2019.01.01 -2019.12.31)

| | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஓய்வு பெறுகை (ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2:17 ஆம் பிரிவின் கீழ் ஓய்வுபெறுகை தவிர்ந்த) | 11 |
| 2. | நிரந்தரமாக்கல் | 565 |
| 3. | ஆட்சேர்ப்பு | 832 |
| 4. | ஒப்பந்த அடிப்படையில் மீள நியமித்தல் | 923 |
| 5. | ஒப்பந்த நியமனங்கள் | 101 |
| 6. | வினைத்திறன் காண் தடை தொடர்பான தீர்மானங்கள் | 924 |
| 7. | பதில் கடைமை / கடமை நிறைவேற்றல் நியமனங்கள் | 1124 |
| 8. | விடுவித்தல் | 102 |
| 9. | சேவையிலிருந்து விலகல் | 23 |
| 10. | உள்ளீர்ப்புச் செய்தல் | 1801 |
| 11. | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரிக்கை களுக்கு வழங்கப்பட்ட பதில்கள் | 93 |
| | **மொத்தம்** | **6499** |

அட்டவணை இல 04

## நியமனப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு - (2019.01.01 -2019.12.31)




படம் 02

| தொ.இல | ஓய்வு பெறுகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 01 |
| 2 | காணி அமைச்சு | 03 |
| 3 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 01 |
| 4 | ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு | 01 |
| 5 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற அமைச்சு | 01 |
| 6 | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 02 |
| 7 | இலங்கை திட்டமிடல் சேவை | 01 |
| | **மொத்தம்** | **10** |

அட்டவணை இல 05

| தொ.இல | நிரந்தரமாக்கல் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிரதமர் அலுவலகம் | 01 |
| 2 | நீதி அமைச்சு | 02 |
| 3 | உள்ளக அலுவல்கள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 01 |
| 4 | காணி அமைச்சு | 02 |
| 5 | கமத்தொழில் அமைச்சு | 05 |
| 6 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 19 |
| 7 | நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 03 |
| 8 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 01 |
| 9 | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 01 |
| 10 | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | 05 |
| 11 | துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 04 |
| 12 | இலங்கை வெளிநாட்டுச் சேவை | 01 |
| 13 | உள்நாட்டு இறைவரிச் சேவை | 02 |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 02 |
| 15 | இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு | 07 |
| 16 | இலங்கை பொறியியல் சேவை | 86 |
| 17 | இலங்கை திட்டமிடல் சேவை | 13 |
| 18 | இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை | 68 |
| 19 | இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை | 01 |
| 20 | இலங்கை விவசாய சேவை | 05 |
| 21 | இலங்கை கணக்காளர் சேவை | 151 |
| 22 | இலங்கை நிர்வாக சேவை | 88 |
| 23 | இலங்கை விஞ்ஞான சேவை | 20 |
| 24 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | 07 |
| 25 | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 69 |
| 26 | இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை | 01 |
| | **மொத்தம்** | 565 |

அட்டவணை இல 06

| தொ.இல | ஆட்சேர்ப்பு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | விலைமதிப்புத் திணைக்களம் | 01 |
| 2 | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 01 |
| 3 | சட்டமா அதிபர் திணைக்களம் | 05 |
| 4 | நீர்பாசனத் திணைக்களம் | 01 |
| 5 | காணி அமைச்சு | 02 |
| 6 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 01 |
| 7 | அச்சுத் திணைக்களம் | 05 |
| 8 | நிள அளவைத் திணைக்களம் | 07 |
| 9 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு | 01 |
| 10 | புத்தசாசன அமைச்சு | 01 |
| 11 | சுற்றுலா மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 01 |
| 12 | காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 01 |
| 13 | வலுச்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு | 01 |
| 14 | சமூக அடிப்படையிலான சீர்படுத்தும் திணைக்களம் | 02 |
| 15 | பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 01 |
| 16 | கமத்தொழில் திணைக்களம் | 16 |
| 17 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 01 |

| | | |
|---|---|---|
| 18 | வர்த்தக அலுவலகள் திணைக்களம் | 01 |
| 19 | ஓய்வூதியத் திணைக்களம் | 01 |
| 20 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 01 |
| 21 | இலங்கை அதிபர் சேவை (கல்விச் சேவைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள்) | 01 |
| 22 | இலங்கை சுங்கச் சேவை | 31 |
| 23 | இலங்கை விஞ்ஞான சேவை | 34 |
| 24 | இலங்கை திட்டமிடல் சேவை | 109 |
| 25 | இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவை | 05 |
| 26 | இலங்கை கணக்காளர் சேவை | 264 |
| 27 | இலங்கை நிர்வாக சேவை | 182 |
| 28 | இலங்கை நில அளவையாளர் சேவை | 65 |
| 29 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | 01 |
| 30 | இலங்கை விஞ்ஞான சேவை | 23 |
| 31 | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 48 |
| 32 | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை | 01 |
| 33 | அரசாங்க சட்டவாதி | 01 |
| 34 | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 16 |
| | **மொத்தம்** | 832 |

அட்டவணை இல 07

| தொ.இல | ஒப்பந்த அடிப்படையில் மீள சேவைக்கு அமர்த்தல் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிரதமர் அலுவலகம் | 01 |
| 2 | கல்வி அமைச்சு | 01 |
| 3 | அரசாங்க சேவை ஆணைக்குழு | 02 |
| 4 | அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 204 |
| 5 | காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு | 40 |
| 6 | தொழில் ம ற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 05 |
| 7 | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 01 |
| 8 | ஜனாதிபதி அலுவலகம் | 01 |
| 9 | நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 01 |
| 10 | பாதுகாப்பு அமைச்சு | 19 |
| 11 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 03 |
| 12 | வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 10 |
| 13 | கமத்தொழில் அமைச்சு | 98 |
| 14 | தபால் மற்றும் தொலைதொடர்புகள் அமைச்சு | 07 |
| 15 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு | 01 |
| 16 | தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு | 01 |
| 17 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு | 429 |
| 18 | நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு | 08 |
| 19 | ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | 04 |
| 20 | பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சு | 19 |
| 21 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அமைச்சு | 01 |
| 22 | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 64 |
| 23 | சுகாதாரம் போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 03 |
| | **மொத்தம்** | 923 |

அட்டவணை இல 08

| தொ.இல | ஒப்பந்த நியமனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புத்தசாசன மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு | 01 |
| 2 | திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | 10 |
| 3 | கமத்தொழில் அமைச்சு | 09 |
| 4 | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 01 |
| 5 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 20 |
| 6 | கலாசார அலுவல்கள் திணைக்களம் | 02 |
| 7 | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 01 |
| 8 | கடற்றொழில் திணைக்களம் | 25 |
| 9 | கமத்தொழில் திணைக்களம் | 16 |
| 10 | நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் திணைக்களம் | 16 |
| | **மொத்தம்** | **101** |

அட்டவணை இல 09

| தொ.இல | விடுவித்தல் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு | 01 |
| 2 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 02 |
| 3 | வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 01 |
| 4 | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 02 |
| 5 | காணி அமைச்சு | 05 |
| 6 | கமத்தொழில் அமைச்சு | 02 |
| 7 | பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சு | 01 |
| 8 | நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வீட்டு வசதிகள் அமைச்சு | 01 |
| 9 | வெகுசன ஊடக அமைச்சு | 01 |
| 10 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 03 |
| 11 | நிதி அமைச்சு | 01 |
| 12 | அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 65 |
| 13 | விசாரணை ஆணைக்குழு | 01 |
| 14 | நில அளவைத் திணைக்களம் | 03 |
| 15 | இலங்கை விஞ்ஞான சேவை | 01 |
| 16 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 02 |
| 17 | இலங்கை பொறியியல் சேவை | 02 |
| 18 | இலங்கை நிர்வாக சேவை | 02 |
| 19 | இலங்கை இறைவரிச் சேவை | 01 |
| 20 | இலங்கை திட்டமிடல் சேவை | 02 |
| 21 | இலங்கை கணக்காளர் சேவை | 03 |
| | **மொத்தம்** | **102** |

அட்டவணை 10

| தொ.இல | வினைத்திறன் காண் தடை தாண்டல் தொடர்பான தீர்மானங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நீதி அமைச்சு | 01 |
| 2 | உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 02 |
| 3 | காணி அமைச்சு | 05 |
| 4 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 15 |
| 5 | கமத்தொழில் அமைச்சு | 15 |
| 6 | உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 01 |
| 7 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 22 |
| 8 | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 01 |
| 9 | அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | 01 |
| 10 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 05 |
| 11 | வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு | 56 |
| 12 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 11 |
| 13 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு | 08 |
| 14 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 14 |
| 15 | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 01 |
| 16 | இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு | 08 |
| 17 | சுங்கத் திணைக்களம் | 16 |
| 18 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 02 |
| 19 | இலங்கை பொறியியல் சேவை | 01 |
| 20 | இலங்கை திட்டமிடல் சேவை | 27 |
| 21 | இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை | 21 |
| 22 | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | 01 |
| 23 | இலங்கை கணக்காய்வுச் சேவை | 01 |
| 24 | இலங்கை தொழில்நுட்பச் சேவை | 499 |
| 25 | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 31 |
| 26 | அலுவலக உதவியாளர் சேவை | 72 |
| 27 | இலங்கை நிர்வாக சேவை | 12 |
| 28 | இணைந்த சாரதிகள் சேவை | 04 |
| 29 | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | 21 |
| 30 | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை | 03 |
| 31 | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | 01 |
| 32 | இலங்கை நில அளவையாளர் சேவை | 13 |
| 33 | இலங்கை விஞ்ஞான சேவை | 07 |
| 34 | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 17 |
| 35 | சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு | 03 |
| 36 | சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 01 |
| 37 | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | 01 |
| 38 | கிராம அலுவலர் சேவை | 04 |
| | **மொத்தம்** | **924** |

அட்டவணை இல 11

| தொ.இல | பதில் கடமை / கடமை நிறைவேற்றல் நியமனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 01 |
| 2 | மாவட்ட செயலாளர் | 38 |
| 3 | கல்வி அமைச்சு | 02 |
| 4 | நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 12 |
| 5 | அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 683 |
| 6 | உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 10 |
| 7 | தேசிய ஒருமைப்பாடு அரசகரும மொழிகள் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு | 02 |
| 8 | பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சு | 04 |
| 9 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 13 |
| 10 | காணி அமைச்சு | 11 |
| 11 | சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிருஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு | 03 |
| 12 | பாதுகாப்பு அமைச்சு | 04 |
| 13 | கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி அமைச்சு | 69 |
| 14 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 01 |
| 15 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 31 |
| 16 | அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | 25 |
| 17 | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 18 |
| 18 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு | 03 |
| 19 | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | 03 |
| 20 | வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு | 01 |
| 21 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 01 |
| 22 | தொலைதொடர்புகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு | 05 |
| 23 | தேசிய பெறுகை ஆணைக்குழு | 01 |
| 24 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 03 |
| 25 | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 168 |
| 26 | நீர்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 04 |
| 27 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 02 |
| 28 | விஞ்ஞான,தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 01 |
| 29 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 05 |
| | **மொத்தம்** | **1124** |

அட்டவணை இல 12

| தொ.இல | சேவையிலிருந்து விலகல் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலங்கை பொறியியலாளர் சேவை | 02 |
| 2 | இலங்கை நில அளவையாளர் சேவை | 02 |
| 3 | கமத்தொழில் அமைச்சு | 01 |
| 4 | இலங்கை நிர்வாக சேவை | 04 |
| 5 | இலங்கை கணக்காளர் சேவை | 01 |
| 6 | இலங்கை வெளிநாட்டுச் சேவை | 01 |
| 7 | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 01 |
| 8 | காணி அமைச்சு | 01 |

| | | |
|---|---|---|
| 9 | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 07 |
| 10 | மகாவலி அபிவிருத்தி அமைச்சு | 01 |
| 11 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 02 |
| | மொத்தம் | **23** |

அட்டவணை இல 13

| தொ.இல | உள்ளீர்ப்புச் செய்தல் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கமத்தொழில் அமைச்சு | 01 |
| 2 | சமுர்த்தி திணைக்களம் | 1125 |
| 3 | பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் | 01 |
| 4 | இலங்கை பொறியியலாளர் சேவை | 02 |
| 5 | இலங்கை நில அளவையாளர் சேவை | 623 |
| 8 | இலங்கை கணக்காளர் சேவை | 02 |
| 9 | இலங்கை விஞ்ஞான சேவை | 47 |
| | **மொத்தம்** | **1801** |

அட்டவணை இல 14

## 5.3 பதவி உயர்வுப் பிரிவு

இல 1955/22 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அதி விசேடமான வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மற்றும் 1989/29 மற்றும் 2016.01.29, 1990/24 மற்றும் 2016.10.27, 1992/07 மற்றும் 2016.11.07 எனும் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவினது தத்துவங்கள் கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களின் (அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரச சேவை உத்தியோகத்தர்கள், நீதிச் சேவை உத்தியோகத்தர்களை நீங்கலாக) பதவிகளுக்கு நியமித்தல் / பதவி உயர்வுகள் தொடர்பிலான பின்வரும் பணிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பதவி உயர்வுப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

### 5.3.1 பதவி உயர்வுப் பிரிவின் செயற்பாடுகள்

அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு / ஆட்சேர்ப்பு திட்டம் / பதவி உயர்வுத் திட்டம் ஆகியவற்றின் பிரகாரம் பதவியுயர்த்தல். அத்தோடு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் போட்டிப் பரீட்சைகள், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படும் பதவி உயர்வுகள் மூலம் உத்தியோகத்தர்களை ஏற்புடைய பதவிகளுக்கு நியமித்தல். நாடளாவிய சேவைகளின் தரம் 1 க்கு மற்றும் அதற்கு மேலுள்ள தரங்களிலுள்ள உத்தியோகத்தர்களை ஒரு பதவியிலிருந்து இன்னுமொரு பதவிக்கு இடமாற்றம் செய்யும் போது முன்னங்கீகாரத்தை வழங்கி ஏற்புடைய புதிய பதவிக்கு நியமித்தல். பிரதேச செயலாளர் பதவிக்கு நியமித்தல். (நிரந்தர, பதில் கடமை, கடமை நிறைவேற்றல்), பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாக சுகாதார சேவைக்குழு மற்றும் கல்விச் சேவைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு எதிரான மேன்முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது பதவி உயர்வுப் பிரிவின் கடமைப் பொறுப்பாகும்.

### 5.3.2 2019 ஆம் ஆண்டு பதவி உயர்வுப் பிரிவின் முன்னேற்றம் (2019.01.01 - 2019.12.31)

| தொ.இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஒரு தரத்திலிருந்து இன்னோர் தரத்திற்கு பதவி உயர்வு | 550 |
| 2 | தேர்வு அடிப்படையிலான பதவி உயர்வு | 1084 |
| 3 | பதவிகளுக்கு நியமித்தல் | 528 |
| 4 | பதில் கடமை, கடமை நிறைவேற்றல் நியமிப்பு (பிரதேச செயலாளர்) | 81 |
| 5 | தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல் கோரிக்கைகளுக்கு வழங்கப்பட்ட பதில்கள் | 72 |
| | மொத்தம் | **2315** |

அட்டவணை இல 15

### பதவி உயர்வுப் பிரிவின் முன்னேற்றம் (2019.01.01 -2019.12.31)




படம் 03

| தொ.இல | ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவியுயர்வு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலங்கை பொறியியலாளர் சேவை | 24 |
| 2 | இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவை | 03 |
| 3 | இலங்கை விவசாய சேவை | 18 |

| | | |
|---|---|---|
| 4 | இலங்கை திட்டமிடல் சேவை | 108 |
| 5 | இலங்கை கணக்காளர் சேவை | 159 |
| 6 | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை | 29 |
| 7 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | 07 |
| 8 | இலங்கை தொழில்நுட்பச் சேவை | 01 |
| 9 | இலங்கை நிர்வாக சேவை | 21 |
| 10 | இலங்கை நில அளவையாளர் சேவை | 62 |
| 11 | இலங்கை சுங்கச் சேவை | 13 |
| 12 | இலங்கை வெளிநாட்டுச் சேவை | 04 |
| 13 | இலங்கை விஞ்ஞான சேவை | 33 |
| 14 | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 55 |
| 15 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 03 |
| 16 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு | 01 |
| 17 | காணிக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் | 01 |
| 18 | அஞ்சல் திணைக்களம் | 02 |
| 19 | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | 05 |
| 20 | சமூக சேவைகள் திணைக்களம் | 01 |
| | **மொத்தம்** | **550** |

அட்டவணை இல 16

| தொ.இல | தேர்வு அடிப்படையிலான பதவியுயர்வுகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலங்கை பொறியியலாளர் சேவை | 20 |
| 2 | இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை | 03 |
| 3 | இலங்கை விவிசாய சேவை | 10 |
| 4 | இலங்கை திட்டமிடல் சேவை | 33 |
| 5 | இலங்கை கணக்காளர் சேவை | 81 |
| 6 | இலங்கை நிர்வாக சேவை | 94 |
| 7 | இலங்கை தொழில்நுட்ப சேவை | 16 |
| 8 | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை | 14 |
| 9 | இலங்கை வெளிநாட்டுச் சேவை | 01 |
| 10 | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அதி உயர் தரம் | 275 |
| 11 | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 01 |
| 12 | கிராம அலுவலர் | 67 |
| 13 | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் | 01 |
| 14 | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு | 02 |
| 15 | சிறைச்சாலைகள் திணைக்களம் | 11 |
| 16 | இலங்கைப் புகையிரதத் திணைக்களம் | 210 |
| 17 | மதுவரித் திணைக்களம் | 11 |
| 18 | சுங்கத் திணைக்களம் | 126 |
